

மகளிர் விடியல் பயணம் திட்டத்தில் சிதம்பரம் குறிஞ்சிப்பாடி (வழி கொத்தவாச்சேரி, சாத்தப்பாடி) வழித்தடத்தில் புதிய பேருந்து சேவை மற்றும் சிதம்பரம் திருப்பதி வழித்தடத்தில் மற்றொரு புதிய பேருந்து சேவை என இரண்டு புதிய அரசு பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கல்விக்குழு தலைவர் வி.சிவக்குமார், தொமுச மண்டல நிர்வாகிகள் தங்க. ஆனந்தன்,பி.பழனிவேல், பால.செந்தில்நாதன், பால.விநாயகம் உள்ளிட்ட போக்குவரத்து கழக அலுவலர்கள், நகராட்சி அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### டி.செங்குட்டுவன் – இ.ஜி.சுகவனம் பங்கேற்பு!

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி – தே.மதியழகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

கிருஷ்ணகிரி, செப். 2 -

கிருஷ்ணகிரியில், கிழக்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம், மாவட்ட அவைத் தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ் தலைமையில் நடந்தது. கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய செயலாளர் கோவிந்தன் வரவேற்புரை ஆற்றினார்

இதில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ., ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பேசுகையில்,

கடந்த நாடாளுமன்ற தேர்தலை காட்டிலும், இந்த முறை திமுக கூட்டணி சார்பில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத்தை, அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்துள்ளீர்கள். இதற்காக இரவு பகலாக பாடுபட்ட கட்சி நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். வருகிற 2026ம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளுக்கும் மேல் திமுக கூட்டணி வெற்றி பெறவேண்டும். அதற்காக கட்சியினர் பணியாற்ற முதல்வர் அறிவுறுத்தி உள்ளார். இந்த மாவட்டத்தை பொறுத்தவரை, 6 சட்டமன்ற தொகுதிகளிலும் திமுக கூட்டணி அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறும். 2026 தேர்தலிலும் மீண்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சி தொடர தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும்,' என்றார்.

கிருஷ்ணகிரியில் நடந்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கூட்டத்தில் திமுக பவள விழாவை யொட்டி, சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் கிருஷ்ணகிரி' மாவட்டத்தில் இருந்து பெருந்திரளாக பங்கேற்பது, கலைஞரின் உருவத்துடன் 100 ரூபாய் நாயணம் வெளியிட்ட ஒன்றிய அரசுக்கு நன்றி தெரிவிப்பது, கலைஞருக்கு ஒன்றிய அரசு பாரதரத்னா விருது வழங்கி கவுரவிக்க வேண்டும், வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் கட்சியினர் தீவிரமாக ஈடுபட வேண்டும். 2026 சட்டமன்ற தேர்தலில் முதல்வர் ஆணைப்படி, கிழக்கு மாவட்டத்தில் உள்ள 3 தொகுதிகளிலும், திமுக சார்பாக போட்டியிடுபவர்களை வெற்றி பெற செய்வது என்பது 'உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ. ஜி.சுகவனம், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் எம்.வி.வெற்றிச்செல்வன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், பாலன், நாகராசன், கோதண்டன், சித்ரா சந்திரசேகர், நகர செயலாளர் நவாப். ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், தேங்காய்.சுப்பிர மணி,மகேந்திரன், சாந்தமூர்த்தி, நரசிம்மன், குண.வசந்தரசு ராஜேந்திரன், அறிஞர், செல்வம், குமரேசன், ரஜினிசெல்வம், பேரூர் கழக செயலாளர்கள் ஜே.கே.எஸ். பாபு, தம்பிதுரை, வெங்கட்டப்பன். பார்த்திபன், பர்கூர் சட்டமன்ற பொறுப்பாளர் அன்பரசன், தொழிலதிபரும் கழகப் பிரமுகருமான சீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள், மாவட்ட நகர ஒன்றிய அணிகளின் அமைப் பாளர்கள் , தலைவர்கள் ,துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் , ஊராட்சி செயலாளர்கள் உள்ளிட்ட 2000 க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# அரியலூர் நகரப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், செப். 2 -

அரியலூர் மாவட்டம் அரியலூர் நகரத்தில் கழகத் தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தர வின்படி,

அரியலூர் மாவட்டம், அரியலூர் நகர பொது உறுப்பினர்கள் கூட்டம், அரியலூர் எஸ்.டி.மேரீஸ் திருமண மண்டபத்தில், நகர அவைத் தலைவர் மாலா.தமிழரசன் தலைமையில், நகர செயலாளர் இரா.முருகேசன் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்கள், கழக சட்டத் திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மா.இராஜேந்திரன், செல்வராணி ரவீந்தர், கோ.உத்திராபதி, மா.சண்முகம், நா.ஜெயகுமார், க.ராமு,க. கருணாநிதி

ஆகியோர் முன்னிலை வகித்தனர். நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேசினார்.

அரியலூர் மாவட்டத்தை உருவாக்கி தந்தது நம் தலைவர் கலகஞர் தான், அதேபோல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கொண்டுவந்தது தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் தான் என்பதை மறந்துவிடகூடாது நகரப் பகுதிகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது மேலும் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவே திமுக ஆட்சியில் தான் அரியலூருக்கு பலத் திட்டங்கள் வந்து உள்ளது அரியலூர் நகர் பகுதியில் வரும் தேர்தலில் திமுக அதிக அளவில் வாக்குகள் பெறுவதற்கு நிர்வாகிகள் முழுமையாக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்ற வேண்டும் என பேசினார்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திர சேகரன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், நகர் மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, அருண்ராஜா, பி.பி.செல்வம், ஆ.குணா, தங்கை. எழில்மாறன், ராஜசேகரன், விஜயலட்சுமி செல்வராஜ், டி.ஆர்.அன்பழகன், காந்திமதி சுகுமாரன், ராணி சந்திரசேகர்,மகேந்திரன், கதிரவன்,இரா.சுர்ஜித், ராஜ்குமார், குமரேசன், .அசோக், நூர்தின் ராஜா, ஜெயராமன் , சரவணன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இறுதியாக நகர துணை செயலாளர் சி.ஜெய்குமார் நன்றி கூறினார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர். எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி , மருத்துவர் அணி நிர்வாகிகளுடன் கலந்துரையாடி ஆலோசனை வழங்கினார். மற்றும் மருத்துவ அணி புதிய உறுப்பினர் சேர்க்கை படிவத்தினை வழங்கினார்கள். உடன் மருத்துவர் அணி தலைவர் மருத்துவர் சதீஷ் , புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் சுதர்சன், தெற்கு மாவட்ட மருத்துவ அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம் அரியலூர் நகரக் கழகத்தின் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரையாற்றினார். உடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், நகர செயலாளர் இரா.முருகேசன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# வடலூர் பணிமனையில் பணியாளர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், செப். 2 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) லிட். சார்பில் வடலூர் பணிமனையில் பணியாளர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறையை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு புதிய பேருந்து சேவைகளை 30.08.2024, வெள்ளிக் கிழமை, மாலை, 3.30 மணியளவில், தொடங்கி வைத்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், முன்னிலையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) லிட். கடலூர் மண்டலத்திற்குட்பட்ட வடலூர் பணிமனையில் பணியாளர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறையை திறந்து வைத்து பார்வையிட்டார். தொடர்ந்து,

வடலூர் பணிமனையில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்திட வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் வாயிலாக ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலான பணியாணையை அரசு போக்குவரத்து கழகம், கடலூர் மண்டல பொது மேலாளர் அவர்களிடம் வழங்கினார்.

வடலூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர் விடியல் பயணம் திட்டத்தில் சிதம்பரம் குறிஞ்சிப்பாடி (வழி கொத்தவாச்சேரி, சாத்தப் பாடி) வழித்தடத்தில் புதிய பேருந்து சேவை மற்றும் சிதம்பரம் திருப்பதி (புறப்படும் நேரம், சிதம்பரம் காலை 6.45 , திருப்பதி இரவு 18.50) வழித்தடத்தில் மற்றொரு புதிய பேருந்து சேவை என இரண்டு புதிய அரசு பேருந்துகளை பொதுமக்களின் பயன் பாட்டிற்கு துவக்கி வைத்தார்.

வடலூர் பேருந்து நிலையம் உட்கட்டமைப்பு வசதிகள் நிதியின் கீழ் ரூ.5.85 கோடி மதிப்பீட்டில் கட்டுமான பணிகள் நடைபெறுவதையும், மேலும், வடலூர் பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.110 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து நிலையத்தில் சுற்றுச்சுவர் மற்றும் பேருந்து ஓடுபாதை அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கடலூர் மண்டல பொது மேலாளர் சி.கே. ராகவன், மாவட்ட கல்விக்குழு தலைவர் வி.சிவகுமார், கடலூர் மண்டல போக்குவரத்து தொ.மு.ச பொது செயலாளர் தங்க ஆனந்தன், தலைவர் பி.பழனிவேல், பொருளாளர் செந்தில்நாதன், அமைப்பு செயலாளர் பாலவிநாயகம், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன்,

வடலூர் நகர மன்ற தலைவர் சு.சிவக்குமார், நகர செயலாளர் த.தமிழ்ச்செல்வன், நகர மன்ற துணைத் தலைவர் சுப்புராயலு, மற்றும் போக்குவரத்து கழக அலுவலர்கள், நகராட்சி அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை! ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

ஒசூர், செப். 2 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம், ஒசூரில் நேற்று நடை பெற்றது. அவைத்தலைவர் யுவராஜ் தலைமை வகித்தார். மேயர் சத்யா வரவேற்றார். ஒன்றிய செயலாளர் சீனிவாசலு ரெட்டி, திவாகரன், ரகு நாத், நாகேஷ், கஜேந்திர மூர்த்தி, பாக்கியராஜ், சின்ராஜ், கருணாகரன், ஸ்ரீதர், ராஜா(எ) தணிகாசலம், பேரூர் செயலாளர் சீனிவாசன், தஸ்தகீர், மாநகர நிர்வாகிகள் செந் தில்குமார், கோபாலகிருஷ்ணன், ரவிக்குமார், சாந்தி, தியாகராஜ் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்எல்ஏ ஆகி யோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் ஒசூரில் இருந்து விமான சேவைக்கு நடவடிக்கை எடுக்கப்படுமென

அறிவித்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப் பட்டது. மேலும், தொழில் முதலீடுகளை ஈர்க்க அமெரிக்க சென்றுள்ள முதல்வருக்கு மேற்கு மாவட்ட திமுக சார்பில் வாழ்த்து தெரிவிப்பது, மாநகர, ஒன்றிய, பேரூர் பகுதிகளில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவது. 2ம் கட்ட புதிய உறுப்பினர்கள் அட்டை வழங்குவது, வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் மற்றும் ஒஎம்ஆர் படிவம் விரைவாக வழங்குவது உள்ளிட்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், மாவட்ட துணை செயலாளர்கள் முருகன், முன்னாள் எம்எல்ஏ சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வீரா ரெட்டி, எல்லோரா மணி, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன் மற்றும் விஜயகுமார், அரியப்பன், ஜெயராமன், சீனிவாசன், தனலட்சுமி. அருணா பூசன்குமார், முனிராஜ், அப்துல் கலாம், ஷேக் ரஷீத், சரோஜினி பரசு ராமன், யசோதா நட்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திம்மராஜ் நன்றி கூறினார்.

### மேல்மலையனூர் ஒன்றியத்தில் 63.19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

# சமையலறை கூடங்கள், நியாய விலைக் கடைகள்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, செப். 2 -

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அன்னமங்கலம் ஊராட்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடை கட்டிடம், தேவனூர் ஊராட்சியில்13.14. லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாய விலை கடை, வடவெட்டியில் ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பகுதி நேர நியாய விலை கடை மற்றும் சித்தேரி ஊராட்சியில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் கீழ்23.56 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற கட்டிடம்,அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 5. 61 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட காலை சிற்றுண்டி சமையலறை கூடம், மற்றும் தேவனூர் ஊராட்சியில் 5.86 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமையலறை கூடங்கள் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் தேவனூர் சாந்தி சக்திவேல், சித்தேரி சிவராமன், வடவெட்டி ராஜா மாணிக்கம்,ஆகியோர் முன்னிலை வகித்தனர்

நிகழ்ச்சியில் சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் கலந்து கொண்டு 63 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய கட்டடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு அவர் திறந்து வைத்துபொது மக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் ,மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள் சியாமளா ஜெய்சங்கர்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவ சண்முகம், சையத் முகமது,ஒன்றிய பொறியாளர்கள்தண்டபாணி, நாராயணமூர்த்தி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மதுசூதனன், கூட்டுறவு சார்பதிவாளர் ராஜகுமாரன்,ஒன்றிய நிர்வாகிகள் சரவணன், செந்தில்குமார், வெங்கடேசன் ,சிவசக்தி, மன்னஏழுமலை ,இளைஞரணி நிர்மல் குமார், ஊராட்சி நிர்வாகிகள் அன்னமங்கலம் உதயசூரியன், குமாரசாமி, நாராயணன், மல்லிகா, தேவனூர் அண்ணாமலை ,கார்த்திகேயன், கோபி, சித்தேரி காந்தி ,பழனி , வடவெட்டி பெருமாள், ஏகவண்ணன் ,தாமோதரன், தேசிங்கு ,ஆனந்தன், பூங்காவனம் , மற்றும் துறை சார்ந்தஅலுவலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



கூத்தாநல்லூர் நகர தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா சிறப்பு பட்டமன்றம் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் எஸ்.வி.பக்கிரிசாமி மற்றும் நகர நிர்வாகிகள் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில், பேராசிரியர் டாக்டர் அபு குழுவினரின் பட்டமன்றத்தில், நகர்மன்ற தலைவர் பாத்திமா பஷீரா , நகர கழக நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணகான பொதுமக்கள் பங்கேற்றனர்.